**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண்.37/2023**

PW1 – திரு. ரவிச்சந்திரன் நாள். 26.06.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B,ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 114/14A. தாவா சொத்தின் நான்குமால் விவரங்கள் என்னவென்றால் கிழக்கே சாலை, தெற்கே ராஜாகோபால் இடம், மேற்கே சிங்காரம் உடையார் கைலாச உடையார் இடம் வடக்கே பூமாணிக்க உடையார் இடம். தாவா சொத்தை நான் யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் மாணிக்கம், வேலுச்சாமி மற்றும் செல்லச்சாமி. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் செம்புடையார் என்ற சிவசாமி பெயரில் இருந்தது.

2. மேற்படி செம்புடையார் என்ற சிவசாமி நான் கிரையம் வாங்கும் போது உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரையம் பெறும் போது செம்புடையார் என்ற சிவசாமி உயிருடன் இல்லாத போது எதன் அடிப்படையில் மாணிக்கம், வேலுச்சாமி மற்றும் செல்லச்சாமி ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் வாரிசுகள் என்ற அடிப்படையில் வாங்கினேன். கிரையம் வாங்கும்பொழுது செம்புடையார் என்ற சிவசாமி

என்பவரின் வாரிசு சான்றிதழ் பத்திர பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதா என்றால் சமர்ப்பிக்கப்பட்டது. செம்புடையார் என்ற சிவசாமி என்பவர் எனது ஊரை சார்ந்தவரா என்றால் சார்ந்தவர். செம்புடையார் என்ற சிவசாமிக்கு எத்தனை வாரிசு என்றால் அதைப்பற்றி தெரியாது. நான் ஒரே ஊரை சார்ந்த நபர் என்றும் செம்புடையார் என்ற சிவசாமி வாரிசு பற்றி விவரம் தெரியும் என்றும் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான நாட்கள் கடம்பூரில் இருப்பேன் என்றால் சரிதான். செம்புடையார் என்ற சிவசாமிக்கு மாணிக்கம், வேலுச்சாமி மற்றும் செல்லச்சாமி ஆகியோர்களுடன் சேர்த்து பூமயில், பூ செண்டு என்ற வாரிசுகளும் உண்டு என்றால் அதைப்பற்றி தெரியாது.

3. தாவா சொத்து கிழக்கே உள்ள சாலை எப்பொழுதும் போக்குவரத்தாக ஆள் நடமாட்டம் உள்ள சாலை என்றால் சரிதான். தாவா சொத்தை செல்லையா என்பவர் 17.12.2007 ஆம் தேதி 1ம் பிரதிவாதிக்கு அவருக்குரிய பாகத்தின் அடிப்டையில் தாவா சொத்தை உள் நாட்டு கிரையம் கொடுத்து அன்றைய தேதியிலிருந்து தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி அவருடைய டிராக்டரை நிறுத்துவதற்கு கொட்டகை அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. கடம்பூர் ஊராட்சியில் மேற்படி கொட்டகைக்கு 1ம் பிரதிவாதி பெயரில் 2023 வரை வரி ரசீதுகள் வழங்கப்பட்டது என்றால் தற்போது இருக்கும் தலைவர் தேர்தல் முன் விரோதம் காரணமாக என் கொட்டகைக்கு 1ம் பிரதிவாதிக்கு வரி ரசீது வழங்கியுள்ளார். உள்ளாட்சி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது என்றால் 4 ஆண்டுகளுக்கு முன்பு.

4. மேற்படி தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்றால் என் நண்பர் போட்டியிட்டார், அவருக்கு நான் பூத் ஏஜெண்டாக செயல்பட்டேன். வா.சா.4 வது ஆவணமானது மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல விசாரணை செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நடக்காத சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து உண்மைக்கு புறம்பான புகார் என்பதால் காவல் நிலையத்தில் புகாரை விசாரிக்கவில்லை என்று சொன்னால் உண்மையான சம்பவம் தான். தாவா சொத்திற்கு எனது பெயர் நீங்கலாக வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனா என்றால் என்னுடைய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். கடம்பூர் குரூப்பில் எனது கிராமத்தில் உள்ள 2 சொத்துக்களுக்கு போலியான ஆவணம் தயார் செய்து சொத்தை கிரையம் பெற்றதாக திருவாடானை காவல் நிலையத்தில் என் மீது 2 வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் ஒரு வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுவிட்டது ஒரு வழக்கு மட்டும் நிலுவையில் உள்ளது.

5. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட வழக்கானது சமரசத்தின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் நீண்ட நாட்களாக சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி உள்நாட்டு கிரையம் வாங்கிய நபரின் பெயர் செல்லையா என்கிற செல்லசாமி என்றால் சரியல்ல செல்லசாமி என்கிற ஒரே பெயர் மட்டும் தான். தாவா சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து விவசாயம் செய்து வருவதாக நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேன் என்றும் அவ்வாறு செய்து வருவதற்கு அடங்கல் அனுபவம் வர செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பயிர் இன்சூரன்ஸ் தாக்கல் செய்துள்ளேன். செம்பையார் உடையார் வாரிசுகள் யார் என்று நிரூபணம் செய்வதற்கு கடம்பூர் கிராம நிர்வாக அலுவலரையோ உள்ளூர் நபர்களை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். செம்மையாஉடையாரின் சொத்தை அவருடைய இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் மூலம் முறையாக தாவா சொத்தை கிரையம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தின் போது கொடுக்கப்பட்ட வாரிசு சான்றிதழ் போலியாக தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கிரையம் பதிவு செய்யப்பட்டதால் மேற்படி கிரையம் ஆனது செல்லதக் கதல்லது என்று

சொன்னால் சரியல்ல. செம்மையாஉடையாரின் வாரிசுகள் அவருடைய பாகப்பிரினை செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் அதைப்பற்றி தெரியாது. பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியும் என்றும் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி உள்நாட்டு கிரையத்தின் படிதான் தாவா சொத்தை இதுநாள் வரை அனுபவம் செய்து வருகிறார் என்றும் அவர் மீது உள்ள முன் விரோதம் காரணமாக போலியான ஆவணத்தை தயார் செய்ததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுத்த மாணிக்கம், வேலுச்சாமி மற்றும் செல்லச்சாமி உயிருடன் உள்ளார் என்றால் உள்ளார்.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருவாடானை